DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உதயபிரகாசம் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். இறந்து போன குமார் எனக்கு அண்ணன் ஆவார். அவரை சுந்தரபாண்டியன் என்பவர் கட்டையால் அடித்ததால் இறந்தார். எனது அண்ணன் 20.05.2021ல் இறந்தார். திருவாரூர் மருத்துவமனையில் இறந்தார். 21.05.2024 தேதி நான் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வேளாங்கண்ணி ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டு இருந்தார் நான் உடன் இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குமார் எப்படி இறந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. இறந்து போனவர் எனது அண்ணன் என்பதால் அ.சா.1 லாவன்யாவை அனுசரித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். இறந்து போன குமாரை எனக்கு தெரியும். அவர் சுந்தரபாண்டியன் என்பவர் கட்டையால் அடித்ததால் இறந்ததாக கேள்விபட்டேன். 20.05.2021ம் தேதி அவர் இறந்துவிட்டார். நான் மறுநாள் 21.05.2021ல் காலை சுமார் 8.00 மணியளவில் சென்று பார்த்தேன். அப்போது வேளாங்கண்ணி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டு இருந்தார். இறந்து போன குமார் அண்ணன் உறவு முறையாகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை திருவாரூர் மருத்துவமனையில் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனக்கு உறவுகாரர் என்பதால் நான் அதனை அனுசரித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிவேல் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். இறந்து போன குமார் எனது அண்ணன் ஆவார். அவர் டீ கடைக்கு சென்று வரும் போது ஏதோ வாக்கு வாதம் ஏற்பட்டு அதில் சுந்தரபாண்டியன் அடித்துவிட்டார். 14.05.2021 அன்று நாகப்பட்டினம் வந்து பார்த்தேன். அதன் பின்பு திருவாரூர் கொண்டு சென்றதாக சொன்னார்கள். 20.05.2021 அன்று இறந்துவிட்டதாக சொன்னார்கள். மறுநாள் காலை 10.00 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு பிரேத பரிசோதனை போலீசார் செய்தார்கள். எனது அண்ணன் பெயரை கேட்டார்கள் நான் சொன்னேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போனவர் எனது சித்தப்பா என்று சொல்லவில்லை அண்ணன் என்று தான் சொன்னேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும் பொய்யாக விசாரணை செய்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். 14.05.2021 அன்று மாலை 5.30 மணிக்கு என் செந்த வேலை சம்மந்தமாக சுடுகாட்டிற்கு அருகில் உள்ள என் வயலுக்கு சென்றேன். நானும் என்னுடன் கண்ணன் என்பவரும் வந்தார். அப்போது ஆய்வாளர் அங்கு இருந்தார். அப்போது காலையில் நடந்த சம்பவம் சம்மந்தமாக சுந்தரபாண்டியனை பிடித்து விசாரணை செய்து கொண்டு இருந்தார். அந்த சுந்தரபாண்டியன் நீதின்றத்தில் உள்ளார். அவர்கள் விசாரித்தார்கள் எல்லாவற்றையும் சுந்தரபாண்டியன் ஒப்புக் கொண்டார். ஆய்வாளர் அழைத்து கொண்டு வந்து பிள்ளையார் கோவில் அருகில் நானும் கண்ணணும் வந்தோம் அப்போது சுந்தரபாண்டியன் அழைத்து வந்தார்கள். சுந்தரபாண்டியன் சொன்னதை ஆய்வாளர் லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டார். அப்போது சுந்தரபாண்டியன் கட்டையால் அடித்தேன் என்று சொன்னார். அந்த கட்டையை கருவை காட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அவர் எடுத்து கொடுத்தை பதிவு செய்து கொண்டார். அதில் என்னை அழைத்து சென்றால் கருவை கட்டையை போட்ட இடத்தில் காட்டுகிறேன் என்று சொன்னால் அதில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கருவை கட்டை தான் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட கருவை கட்டை சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கைபற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்தேன். அந்த கைபற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன்

கண்ணன் என்பவரும் கையொப்பம் செய்தார். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் குறிப்பு எடுத்தை எல்லாம் லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டார் என்றால் சரிதான். லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டததை பரவையில் பிரிண்ட் எடுத்து வந்தார்கள். நான் கைபற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்த போது மாலை 7.00 மணி இருக்கும். போலீசாருடன் சுமார் 2 மணி நேரம் இருந்திருப்பேன். என்னிடம் காட்டப்படும் சம்மனில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3, 4 கையொப்பம் வெவ்வேறு மாதிரி உள்ளது என்றால் நான் அவ்வாறு தான் கையொப்பம் செய்வேன். மேற்படி கையொப்பம் என்னுடையது இல்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சா.பொ.1 கருவை கட்டைக்கு குறிப்பிட்ட அடையாளம் இல்லை என்று சொன்னால் சரிதான். சா.பொ.1 கருவை கட்டையை எதிரி எடுத்து ஆஜர் செய்தார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போன குமார் பிரேதத்தை அடக்கம் செய்ய ஜேசிபி உடன் அதிகாரிகள் வந்து கொரணா பதிக்கப்பட்ட குமாரின் பிரேதத்தை அடக்கம் செய்தார்கள் என்றால் சரியல்ல. நானும் இறந்து போன குமாரும் ஒரே அரசியல் கட்சியை மற்றும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.3, 4 உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னாலும் என்னை ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை என்று சொன்னாலும், ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியராஜ் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னால் சாட்சி சொன்ன ஜெயராமனை எனக்கு தெரியும். 14.05.2021 அன்று சாய்காலம் 3.00 மணியளவில் குளத்திற்கு குளிக்க சென்றோம். அப்போது பிள்ளையார் கோவில் வலைவில் போலீஸ் வேன் நின்றது. நாங்கள் அப்போது அங்கு சென்றோம். காவல் அதிகாரியிடம் என்ன சார் என்று கேட்டோம். அவர்கள் குமார் என்பவரை சுந்தரபாண்டியன் என்பவர் அடித்துவிட்டார் என்றும், அவர் மருத்துவமனையில் அட்மிஷனில் உள்ளார் என்றும், அதற்கு நாங்கள் வரைபடம் வரைந்து கொண்டு இருக்கிறோம் அதற்கு எங்களை சாட்சியாக இருக்க சொன்னார்கள். எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் அடிப்பட்ட இடம், பிள்ளையார் கோவில் , கருவை தோப்பு எல்லாவற்றையும் எழுதினார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் ஜெயராமனும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை என்று சொன்னால் ஞாபகம் உள்ளது. நான் கையெழுத்து செய்யும் போது எனது பெயரில் Backiyaraj என்று கையொப்பம் செய்வேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. குமார், லாவன்யா ஆகியோர் எனக்கு வேண்டியவர்கள் எங்கள் சமுகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். அதனால் எனக்கு தெரியாது சங்கதிகளை தெரிந்ததாக பொய்யாக கையெழுத்து போட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். 14.05.2021 ம் ஆண்டு மதியம் 3.00 மணிக்கு நானும் பாக்கியராஜும் குளிப்பதற்கு குளத்திற்கு சென்றோம். அப்போது வேளாங்கண்ணி காவல் ஆய்வாளர் பழைய பிள்ளையார் கோவில் வலைவு அருகில் வந்திருந்தார். அப்போது ஆய்வாளர் சுந்தரபாண்டியன் குமாரை அடித்துவிட்டதாகவும் அதனால் நாங்கள் மேப் போட வந்துள்ளதாகவும் சொன்னார். அதற்கு நீங்கள் இருவரும் சாட்சி கைபொய்யம் செய்யுமாறு கூறினார். என்னுடன் இருந்த மற்றொருவர் பாக்கியராஜ் ஆவார். ஆய்வாளர் வரைபடம் வரைந்தார் மேற்படி பார்வை மகஜர் தயார் செய்தார். அதே தார் ரோட்டில் பூவரசு மரம், பக்கத்தில் நடராஜ் சொந்தமான விளை நிலம், ராஜேந்திரன் கருவை காடு , ஈபி போஸ்ட் ஆகியவை வரைந்து கொண்டார். நான் அந்த பார்வை மகஜர் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பார்வை மகஜரில் கையொப்பம் குளத்து கரையில் வைத்து போட்டோம். அந்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தற்போது ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இல்லை. இறந்து போன குமாரும் நானும் ஒரே அரசியல் கட்சியை சார்ந்தவர் என்றால் சரிதான். தெரியாத சங்கதிகளை தெரிந்தது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோகரன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது நிர்த்தனமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் ஊராட்சி மன்ற தலைவராக பணி செய்து வருகிறேன். இறந்து போன குமாரை எனக்கு தெரியும். இதற்கு முன்னால் சாட்சி சொன்ன அ.சா.1 லாவன்யா, அ.சா.2 ரமேஷ்மாரை ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் வடவூர் பஞ்சாயத்தை சேர்ந்தவர்கள். நான் குபேந்திரன் மற்றும் மூவர் இரு சக்கர வாகனத்தில் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து குமாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அது எப்போது என்றால் சுமார் காலை 7.00 மணி இருக்கும். வருடம் 2021 5வது மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய பைக்கில் அழைத்து சென்றேன் என்று நினைக்கிறேன். சம்பவம் எனது வீட்டிற்கு 200 மீட்டர் தூரத்தில் நடந்தது. எனது பைக்கில் அவரை அழைத்து சென்றேன். இறந்து போன குமாரை பிடித்து கொண்டு சென்றது குபேந்திரன் என்று எனக்கு ஞாபகம் உள்ளது. சம்பவ இடத்தில் அவரது மனைவி வந்திருந்தார். இதற்கு முன்னால் சாட்சி சொன்ன ரமேஷ்தான் அவரை தூக்கினார். ரமேஷ் மருத்துவமனைக்கு வந்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நாகை

மருத்துவமனையில் இருந்து திருவாரூர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு 10 நாள் மருத்துவ சிகிச்சையில் இருந்தார். பின்பு இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இயற்கை மரணம் என்று உழவர் அட்டையில் அ.சா.1 ரூ. 22 ஆயிரம் பணம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது தெரியும். உழவர் அட்டைக்கு சான்றிதழ் நான் தான் தர வேண்டும் என்று சொன்னால் சரிதான். காயம் பட்ட பிறகு நான் அந்த இடத்திற்கு வந்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் ரமேஷ் இருந்தார் என்று சொன்னால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது ரமேஷ் தூக்கி கொண்டு இருந்ததை நான் பார்த்தேன். அதன் பிறகு இறந்து போன குமாரின் மனைவி வந்துவிட்டார். இறந்து போன குமாரும் நானும் ஒரே அரசியல் கட்சியை சேர்ந்தவார்கள் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ்குமார் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது வடவூர் தென்பாதி வாத்தியார் தெருவில் வசித்து வருகிறேன். இறந்து போன குமாரை எனக்கு தெரியும். இதற்கு முன்னால் சாட்சி சொன்ன அ.சா.1 லாவன்யாவை தெரியும். அவர்கள் குமாரின் மனைவி ஆவார். 14.05.2021 காலை 6.30 மணியளவில் நிறுத்தனமங்கலம் செல்லும் வழியில் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள வலைவில் நானும் எனது பக்கத்து வீட்டு பையன் குபேந்திரன் என்பவரும் டீ குடிப்பதற்காக நிறுத்தனமங்கலம் சென்றோம். அப்போது டீ கடையில் இருந்து இறந்து போன குமார் வந்து கொண்டு இருந்தார். அப்போது பக்கத்தில் இருந்த கருவை காட்டில் இருந்து வந்த சுந்தரபாண்டியன் அவரை மறைத்து சும்மா வீட்டிற்கு வந்து பணத்தை கொடு என்று தொந்தரவு செய்கிராயாமே என்று வாக்கு வாதம் செய்தார். வாக்குவாதம் முற்றி போகும் போது நாங்கள் அருகில் சென்றுவிட்டோம். அப்போது கோபம் அடைந்து சுந்தரப்பாண்டியான் நீ உயிருடன் இருந்ததால் தானே எனது வீட்டிற்கு அடிக்கடி வந்து தொந்தரவு செய்வான் என்று சொல்லி பக்கத்தில் கிடந்த காய்ந்த கருவை கட்டை எடுத்து முதலில் உச்சம் தலையிலும், நாங்கள் போவதற்கு முன்னாலே தலையின் பின்பக்கத்தில் 4 அடி விழுந்தது.

அப்போது குமாரின் மனைவி லாவன்யா கெஞ்சி கொண்டு இருந்தார். அடித்த சுந்தரபாண்டியனை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் நீதிமன்றத்தில் உள்ள குற்றவாளி கூண்டில் அமர்ந்துள்ளார். என்னிடம் காட்டப்படும் கருவை கட்டை ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கீழே விழுந்தவரை தூக்கி நிறுத்தினோம் அவருக்கு சுய நினைவு இல்லை, இரத்தம் வழிந்தது. அந்த சமயம் எங்கள் ஊர் ஊராட்சி தலைவர் மனோகரன் அந்த வழியாக வந்தார். ஊராட்சி மன்ற தலைவர் வண்டியில் அவரை ஏற்றிவிட்டு குமாருக்கு சுய நினைவு இல்லாததால் அவரை வண்டியில் உட்கார வைத்து என்னுடன் வந்த குபேந்திரன் அவரை பிடித்து கொண்டார். அதன் பின்பு நான் என் வீட்டிற்கு சென்று எனது வண்டியை எடுத்து கொண்டு குமாரின் மனைவியை வண்டியில் ஏற்றி கொண்டு நாகை அரசு மருத்துவனைக்கு வந்தோம். காலை 7.10 மணிக்கு மருத்துவமனையில் அவரை சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்னிட்டு வேளாங்கண்ணியில் இருந்து உதவி ஆய்வாளர், ஆய்வாளர் வந்தார்கள் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள். அதன் பின்னிட்டு இங்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அனுப்பிவிட்டதாக கேள்விபட்டேன். மேல் சிகிச்சைக்கு சென்றாவர் சம்பவம் நடந்து நான்கு ஐந்து நாட்களுக்கு பின்னர் இறந்துவிட்டார். பணம் கொடுக்கல் வாங்கள் பிரச்சனையின் காரணமாக எதிரி சுந்தரபாண்டியன் குமாரை அடித்துள்ளார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வடவூர் தென்பாதியில் டீ கடை இல்லை. வடவூரில் டீ கடை உள்ளது. வடவூர் தென்பாதியில் இருந்து வடவூர் அருகாமையில் உள்ளது என்றால் 1 ½ கி.மீ உள்ளது. இறந்த குமார், லாவன்யா ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆனால் நெருங்கிய

உறவினர் கிடையாது. நானும் இறந்து போன குமாரும் ஒரே அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட கருவை கட்டையில் குறிப்பிட்ட அடையாளம் கூற முடியுமா என்றால் அது வைரம் பாய்ந்த கட்டையாகும். அதனை தவிர குறிப்பிட்ட அடையாளம் சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்ட அடையாளம் சொல்ல முடியாது. இறந்து போன குமார் கருவை வேர் தடுக்கி காயம் பட்டார் என்றும், அதனை வழக்கிற்காக மிகை படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபரின் பிரேதத்தை சோதனை செய்து நாங்கள் தான் அடக்கம் செய்தோம். ஜேசிபியின் மூலம் இறந்த நபரின் பிரேதத்தை அடிக்கம் செய்யவில்லை. எனக்கு தெரியாது சம்பவத்தை இறந்து போனவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் மிகை படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து நபரின் இறப்புக்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லாவன்யா | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.10.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வடவூர் தென்பாதியில் வசித்து வருகிறேன். இறந்து போன குமார் எனது கணவர் ஆவார். 14.05.2021ம் தேதி காலை 6.30 மணியளவில் பழைய பிள்ளையார் கோவில் வலைவு அந்த வலைவு நிறுத்தனமங்கலம் கிராமத்தில் இருந்து வட ஊர் தென்பாதிக்கு வரும் வழியில் உள்ளது. எனது கணவர் டீ வாங்க வட ஊரில் உள்ள எங்கள் வீட்டில் இருந்து நிறுத்தமனமங்கலத்தில் உள்ள கடைக்கு டீ வாங்க சென்றார். திரும்பி டீ பிளாஸ்கில் வாங்கி வந்து கொண்டிருக்கும் போது சுந்தரபாண்டியன் எனது கணவரை கருவை கட்டையால் அடித்துவிட்டார். நான் துணி துவைக்க பிள்ளையார் குளத்திற்கு சென்றோன். எனது கணவர் டீ வாங்க சென்றார். எனது கணவரை அடிக்கும் போது 10 அடி துாரத்தில் நான் இருந்தேன். ஆஜர் எதிரி 4 அடி கருவை கட்டையால் எனது கணவரை அடித்தார். என்னிடம் காட்டப்படும் கருவை கட்டை தான் அந்த கருவை கட்டையாகும். அந்த கருவை கட்டை **சா.பொ.1** ஆகும். நீதிமன்றத்தில் குற்றவாளி கூண்டில் அமர்ந்திருப்பவர் தான் எதிரி சுந்தரபாண்டியன் ஆவார். நான் எனது கணவரை அடிக்காதடா நான் மூன்று பிள்ளைகளை வைத்திருக்கிறேன் என்று சொல்லி

ஆஜர் எதிரியின் காலில் விழுந்து கெஞ்சினேன். அப்போது குளிக்க வந்த ரமேஷ், குபேந்திரன் ஆகியோர் அதனை தடுத்தனர். அதற்கு சுந்தரபாண்டியன் இதோடு செத்து ஒழிந்து போடா தேவிடியா மகனே, குச்சிகாரி மகனே என்று திட்டி கட்டையால் அடித்து கொண்டு இருந்தார். எனது கணவர் சுய நினைவு இல்லாமல் மயக்கம் அடிந்து கீழே விழுந்துவிட்டார். அதன் பின்னிட்டு அடித்துவிட்டு கருவை காட்டில் கருவை கட்டையை போட்டுவிட்டு சுந்தரபாண்டியன் ஓடிவிட்டார். அதன் பின்னிட்டு நாகை அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை நான், குபேந்திரன், ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் மனோகரன் ஆகியோர் இரு சக்கர வாகனத்தில் அழைத்து கொண்டு சென்றோம். எனது கணவரை இரு சக்கரவாகனத்தில் மனோகரனும் குபேந்திரனுக்கு நடுவில் அமர வைத்து அழைத்து சென்றோம். நானும் ரமேஷ் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் சென்றோம். எனது கணவரை நாகை மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனது கணவரை மருத்துமனையில் சேர்த்த அன்றே காவல் துறையினர் வந்தார்கள். காவல் துறையினர் வரும் போது எனது கணவர் சுய நினைவு இல்லாமல் இருந்தார். நான் காவல் துறையினரிடம் புகார் கொடுத்தேன். நான் சொன்னதை ஆய்வாளர் எழுதி கொண்டார். அந்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகார் மனுவை என்னிடம் படித்து காண்பித்தார்கள். அந்த புகார் மனுவில் நான் சொல்லியது போல் தான் இருந்தது. அந்த புகார் ஆவணம் **அ.சா.ஆ.1** ஆகும். அதன் பின்பு திருவாரூர் மருத்துவ கல்லூரிக்கு எனது கணவரை மருத்துவ சிகிச்சைக்காக அனுப்பினார்கள். அங்கு எனது கணவர் 7 நாள் சிகிச்சையில் இருந்தார். ஏழாவது நாள் எனது கணவர் இறந்துவிட்டார். எதிரியின் அண்ணன் ஸ்டாலின் திருமணத்திற்கு தாலி வாங்குவதற்காக 10 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கியிருந்தார். அதில் 7,500 ரூபாய் கொடுத்திருந்தார். மீதம் 2,500 ரூபாய் கொடுக்க வேண்டும். கொரணா காலத்தில் கழ்டமாக இருந்தது. எனது கணவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். செலவிற்காக அந்த பணத்தை கேட்டு வர சென்றிந்தேன் என்று என்னிடம் சொன்னார்.

அதற்கு அந்த பணத்தை தர முடியாது என்று சொல்கிறார்கள் என்று சொன்னார். காசு கேட்டுவிட்டு என்னிடம் வந்து சொன்னார். சுந்தர பாண்டியன் என் அண்ணனிடம் வந்து ஏன் காசு கேட்கிறார் என்று சொல்லி அடித்தார். இது சம்மந்தமாக போலீசர் என்னை போலீசார் இரண்டு முறை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த காலத்தில் கொரணா காலம் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் இயற்கை மரணம் அடைந்ததாக கூறி உழவர் அட்டை நல வாரியத்திடம் இருந்து ரூ. 22 ஆயிரம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. குளத்தில் இருந்து கருவை காட்டை பார்த்தால் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. குளத்தில் இருந்து பார்த்தால் கருவை காடு தெரியும். வீட்டில் இருந்து குளத்திற்கு செல்ல வேண்டும் என்றால் பிள்ளையார் பக்கம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிராமத்தில் இயற்கை உபாதையை கழிப்பதற்கு கருவை காட்டின் பக்கம் ஒதுங்குவது இயற்கை என்று சொன்னால் சரிதான்.. எனது கணவர் இறந்த பிறகு எங்கள் ஊரிர்க்கு மருத்துவ அதிகாரிகள் வந்தாகள் என்றும் உடன் அவர்கள் ஜேசிபி இயந்திரம் கொண்டு வந்து எனது கணவரை புதைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் பிரேதத்தை கொரணா இறப்பு என்று சொல்லி வீட்டிற்கே கொண்டு வராமல் தெரு வழியாக நிறுத்தி உடனே கொண்டு சென்று அடக்கம் செய்தார்கள் என்று சொன்னால் வீட்டிற்கு பிரேதத்தை கொண்டுவந்தார்கள். எனது கணவர் இறப்பு கொரணா இறப்பு என்று சான்றிதழ் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் நோய்வாய் பட்டிருந்தார் கருவை காட்டிற்கு சென்றிருந்த போது அங்கிருந்த வேர் தடுக்கி காயம் பட்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நேரடியாக சம்பவம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. காயம் பட்ட நபரை பார்த்துவிட்டு தான் சம்பவத்தை நான் நேரில் பார்த்தது போல் மிகை

படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரினை யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகாரை நான் சொன்னேன் அதனை அவர்கள் எழுதினார்கள். நான் கடன் கொடுத்தற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் இருவரும் ஒரே வீட்டில் உள்ளார்கள். எனது கணவர் இறப்பிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் புகாரினை மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்தேன்.

**மறு விசாரணை** – இல்லை.